ஜனவரி
2020

விண்மீன்.காம்

# இரண்டாவது வார நடப்பு நிகழ்வுகள்

08 ஜனவரி – 14 ஜனவரி

www.winmeen.com

# நடப்பு நிகழ்வுகள்

**1.சமீபத்தில், அனைத்து நாட்டு மக்களுக்கும் பல்–நுழைவு சுற்றுலா விசாவை அறிவித்த மத்திய கிழக்கு நாடு எது?**

அ. சிங்கப்பூர்

ஆ. பிரான்ஸ்

**இ. ஐக்கிய அரபு அமீரகம் ☑**

ஈ. ஸ்பெயின்




❖ ஐக்கிய அரபு அமீரகத்துக்கு பலமுறை வந்து செல்வதற்கான நுழைவு இசைவு முறையை அந்த நாடு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்நுழைவு இசைவைப்பயன்படுத்தி, அனைத்து நாட்டவரும் அதிகபட்சமாக ஐந்து ஆண்டுகளுக்கு எத்தனை முறை வேண்டுமானாலும் அந்நாட்டுக்கு வந்துசெல்லலாம்.

❖ சுற்றுலா விசாவிற்கான திருத்தத்திற்கு ஐக்கிய அரபு அமீரக அமைச்சரவை அண்மையில் ஒப்புதல் அளித்தது. பன்னாட்டு மக்களின் விருப்பமான சுற்றுலாத்தலமாக ஐக்கிய அரபு அமீரகம் இருப்பதால், ஆண்டொன்றுக்கு சுமார் 20 மில்லியனுக்கும் அதிகமான சுற்றுலாப்பயணிகளை அது ஈர்க்கிறது.


**2.சமீபத்தில் ஒரு புதிய வாழத்தகுந்த புறக்கோளைக் கண்டுபிடித்துள்ள டிரான்சிடிங் எக்ஸோபிளானட் சர்வே சேட்டிலைட் (TESS), எந்த விண்வெளி முகமைக்கு சொந்தமானதாகும்?**

அ. இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு (ISRO)

**ஆ. தேசிய வானூர்தியியல் மற்றும் விண்வெளி நிர்வாகம் (NASA) ☑**

இ. ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனம் (JAXA)

ஈ. சீனா தேசிய விண்வெளி நிர்வாகம் (CNSA)



❖ சூரிய குடும்பத்துக்கு வெளியில் உள்ள கோள்களை கண்டுபிடிப்பதற்காக, 'TESS' எனப்பெயரிடப்பட்ட செயற்கைக்கோளை கடந்த 2018ஆம் ஆண்டில் NASA விண்ணுக்கு அனுப்பியது. இந்நிலையில், அண்மையில் ஒரு புதிய வாழத்தகுந்த புறக்கோளை தேசிய வானூர்தியியல் மற்றும் விண்வெளி நிர்வாகத்துக்குச் சொந்தமான Transiting Exoplanet Survey Satellite (TESS) கண்டுபிடித்துள்ளது.

❖ புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் புறக்கோளுக்கு, 'TOI 700 d' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இது, பூமியின் தோராயமான அளவைக்கொண்டுள்ளது. பூமியிலிருந்து 101.5 ஒளியாண்டுகள் தொலைவில் இது உள்ளதாக NASA அறிவியலாளர்கள் அறிவித்துள்ளனர்.

**3.ஒற்றைக்கொம்பு காண்டாமிருகக் குட்டி ஒன்று சமீபத்தில் மானஸ் தேசியப்பூங்காவில் பிறந்தது. இந்தத் தேசியப்பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. அருணாச்சல பிரதேசம்

**ஆ. அஸ்ஸாம் ☑**

இ. சிக்கிம்

ஈ. ஹிமாச்சலபிரதேசம்



- ❖ மானஸ் தேசியப்பூங்கா UNESCOஇன் உலக பாரம்பரிய தளமாகும்; மேலும், இது அஸ்ஸாம் மாநிலத்தில் அமைந்துள்ள ஓர் உயிர்க்கோளக் காப்பகமாகும். அண்மையில் இந்தத் தேசியப்பூங்காவில் வாழும் R3A என்ற பெயருடைய ஓர் ஒற்றைக்கொம்பு காண்டாமிருகம் குட்டியொன்றை ஈன்றது.

- ❖ அதே பூங்காவில் வாழ்ந்துவரும் மூத்த காண்டாமிருகமான 'லாய்ஸ்ரி'க்கு, கடந்த 2013ஆம் ஆண்டில் 'R3A' பிறந்தது. ஒற்றைக்கொம்பு காண்டாமிருகம் அல்லது இந்திய காண்டாமிருகமானது அழிவின் விளிம்பிலிருக்கும் ஓர் உயிரினமாகும். மேலும், IUCNஇன் சிவப்புப்பட்டியலில் 'பாதிக்கப்படக்கூடியது' என்னும் நிலையில் அது பட்டியலிடப்பட்டுள்ளது. தற்போது, 42 காண்டாமிருகங்கள் மானஸ் தேசியப் பூங்காவில் உள்ளன.

**4.அண்மையில் ஓய்வுபெறுவதாக அறிவித்த டேனியல் டி ரோஸி, எந்த நாட்டைச் சேர்ந்த கால்பந்து வீரர் ஆவார்?**

அ. பிரேசில்

**ஆ. இத்தாலி ☑**

இ. ஜெர்மனி

ஈ. பிரான்ஸ்




- ❖ இத்தாலி அணியின் கால்பந்து வீரரான டேனியல் டி ரோஸி, அண்மையில், தொழிற்முறை கால்பந்தில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார். ரோமா கால்பந்து சங்கத்தைச் சேர்ந்த டேனியல் டி ரோஸி, Serie A லீக் போட்டிகளில் கிட்டத்தட்ட பதினெட்டு ஆண்டுகள் விளையாடியுள்ளார். 2006ஆம் ஆண்டு FIFA உலகக்கோப்பையை வென்ற இத்தாலி அணியின் ஒருபகுதியாகவும் அவர் இருந்துள்ளார்.

**5.மின்சாரத்தில் இயங்கும் வான்வழி வாடகையுந்தினை (electric air–taxi) உருவாக்குவதற்காக எந்தச் சவாரி–பகிர்வு நிறுவனத்துடன் ஹூண்டாய் கூட்டுசேர்ந்துள்ளது?**

அ. திதி (Didi)

**ஆ. ஊபர் (Uber) ☑**

இ. லிப்ட் (Lyft)

ஈ. கிராப் (Grab)




- ❖ தானுந்து நிறுவனமான ஹூண்டாய், அண்மையில், நுகர்வோர் மின்னணுப் பொருட்கள் கண்காட்சி –2020இல் ஊபருடன் இணைந்து உருவாக்கப்பட்ட மின்சாரத்தில் இயங்கும் வான்வழி வாடகை உந்தினை காட்சிப்படுத்தியது.

- ❖ இவ்விரு நிறுவனங்களின் கூட்டணியின்படி, ஹூண்டாய் நிறுவனம் வண்டிகளை உருவாக்கி அவற்றைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவரும் மற்றும் ஊபர் நிறுவனம் அவற்றுக்கான ஆதரவு சேவை, சாலைப் போக்குவரத்து இணைப்பு மற்றும் வாடிக்கையாளர் இடைமுகத்தை வழங்கும். 2023ஆம் ஆண்டுக்குள், நகர்ப்புறங்களில், வணிக நோக்கிலான வான்வழிப் வாடகையுந்துச்சேவைகளை ஊபர் நிறுவனம் தொடங்கவுள்ளது.

**6.தீவிர இந்திரதனுஷ் 2.0 இயக்கம் அண்மையில் தொடங்கியது. இத்திட்டம் எதனுடன் தொடர்புடையது?**



அ. வங்கிகள் இணைப்பு

**ஆ. அனைவருக்கும் தடுப்பூசி ☑**

இ. பாதுகாப்பு கொள்முதல்

ஈ. விண்வெளித் திட்டம்

❖ 'இந்திரதனுஷ் திட்டம்' என்பது 2014ஆம் ஆண்டில் மத்திய சுகாதாரம் & குடும்பநல அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட ஒரு அனைவருக்குமான தடுப்பூசி திட்டமாகும். தீவிரப்படுத்தப்பட்ட இந்திரதனுஷ் 2.0 கடந்த 2019 டிசம்பர் முதல் எதிர்வரும் 2020 மார்ச் வரை மேற்கொள்ளப்படவுள்ளது.

❖ இந்திரதனுஷ் திட்டத்தின்கீழ், தடுப்பூசி போடப்படாத (அ) பகுதியளவு தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கு தடுப்பூசி போடப்படும். இத்திட்டத்திற்கான இலக்கு ஆண்டாக 2020 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்த நிகழ்நேர தரவுகளை பதிவுசெய்வதற்காக அமைச்சகத்தால் IMI 2.0 வலைத்தளம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**7.ஹேஸ்டிங்ஸ் சர்வதேச செஸ் போட்டியில் பட்டம் வென்ற இந்திய கிராண்ட்மாஸ்டர் யார்?**



அ. பெண்டியாலா ஹரிகிருஷ்ணா

ஆ. சசிகிரண் கிருஷ்ணன்

**இ. P மகேஷ் சந்திரன் ☑**

ஈ. அபிஜித் குப்தா

❖ 95ஆவது ஹேஸ்டிங்ஸ் சர்வதேச செஸ் போட்டியில், இந்தியாவின் கிராண்ட் மாஸ்டரான P மகேஷ் சந்திரன் (36) சாம்பியன் பட்டம் வென்றார். 9 சுற்றுகளின் முடிவில் 7.5 புள்ளிகளை அவர் பெற்றார். தீப் சென்குப்தா 13ஆவது இடமும், மற்றொரு இந்திய வீரரான ஸ்வயம் மிஸ்ரா 14ஆவது இடமும் பிடித்தனர். இருவரும் தலா 6 புள்ளிகள் பெற்றனர்.

**8.தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் நலச்சங்கத்திற்கு நிதியுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ள பொதுத்துறை வங்கி எது?**

அ. பாரத ஸ்டேட் வங்கி

ஆ. கனரா வங்கி

**இ. இந்தியன் வங்கி ☑**

ஈ. பேங்க் ஆப் இந்தியா

இंडियन बैंक Indian Bank
Taking Banking Technology to the Common Man

❖ தமிழ்நாட்டைச்சேர்ந்த முன்னணி பொதுத்துறை வங்கியான இந்தியன் வங்கி, அண்மையில், தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் நலச்சங்கத்துடனான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த ஒப்பந்தத்தின்மூலம், சங்கத்தின் உறுப்பினர்கள் தொழில்தொடங்குவதற்கான நிதியுதவி மற்றும் பயிற்சியை இந்தியன் வங்கி அளிக்கும்.

- ❖ தொழில்முனைவோருக்கு சலுகை முறையில் கடன் வசதிகளும் வழங்கப்படும். தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் நலச்சங்கத்தின் உறுப்பினர்களுக்கு இந்தியன் வங்கி சமுதாயத்தின் 'இந்தியன் வங்கி சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனங்கள் (INDSETI – Indian Bank Self–Employment Training Institutes) மூலம் பயிற்சியளிக்கப்படும்.

### 9.சிறு நிதி வங்கியாக மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்ட முதல் நகர்ப்புற கூட்டுறவு வங்கி எது?

அ. பாரத் கூட்டுறவு வங்கி

**ஆ. சிவாலிக் மெர்கண்டைல் கூட்டுறவு வங்கி ☑**

இ. பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா கூட்டுறவு வங்கி

ஈ. பம்பாய் மெர்கண்டைல் கூட்டுறவு வங்கி

- ❖ சிவாலிக் மெர்கண்டைல் கூட்டுறவு வங்கியை சிறு நிதி வங்கியாக (Small Finance Bank) மாற்றுவதற்கு இந்திய ரிசர்வ் வங்கி, அண்மையில், 'கொள்கை அளவிலான' ஒப்புதலை வழங்கியுள்ளது. நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளை சிறு நிதி வங்கிகளாக தன்விருப்பத்தோடு மாற்றுவது குறித்து கடந்த 2018 செப்டம்பரில் ரிசர்வ் வங்கி அறிவித்த பின்னர், இதுபோன்று அனுமதி வழங்கப்பட்ட முதல் நகர்ப்புற கூட்டுறவு வங்கி இதுவாகும்.
- ❖ கொள்கை ரீதியாக ஒப்புதல் அளிக்கப்பட்ட பதினெட்டு மாதங்களுக்குள் இந்திய ரிசர்வ் வங்கியால் நிர்ணயிக்கப்பட்டுள்ளபடி, குறைந்தபட்ச நிகர மதிப்பு மற்றும் மறையிடர் விகிதத்துக்கான மூலதனம் போன்ற ஒரு சிறு நிதி வங்கிக்கான தேவைகளை அக்குறிப்பிட்ட வங்கி பூர்த்திசெய்யவேண்டும்.

### 10. 'ஜல்–ஜீவன்–ஹரியாலி திட்டம்' என்பது எந்த மாநிலத்தின் முதன்மை காலநிலை மாற்ற திட்டமாகும்?

அ. ஒடிசா

ஆ. சத்தீஸ்கர்

இ. ஆந்திரபிரதேசம்

**ஈ. பீகார் ☑**

- ❖ 'ஜல்–ஜீவன்–ஹரியாலி திட்டம்' என்ற காலநிலை மாற்ற திட்டத்தை பீகார் முதலமைச்சர் அண்மையில் தொடங்கிவைத்தார். இந்தத் திட்டத்தின்கீழ், மாநிலம் முழுவதும், காலநிலை மாற்றம் & நீர் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்த பல்வேறு விழிப்புணர்வு திட்டங்கள் நடத்தப்படும். 'ஜல்–ஜீவன்–ஹரியாலி' திட்டத்தின் ஒருபகுதியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'ஜக்ருதா சம்மேளன்' நிகழ்ச்சியில், முதலமைச்சர் நிதிஷ்குமார் ₹700 கோடிக்கும் அதிக மதிப்புள்ள திட்டங்களைத்தொடங்கினார்.
- ❖ காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதற்காக மாநிலம் முழுவதும் 'மனிதச்சங்கிலி' இயக்கத்தை ஏற்பாடு செய்யவும் அம்மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

## நடப்பு நிகழ்வுகள்

**1. BCCIஇன் 'C K நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருது'க்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்திய கிரிக்கெட் வீரர் யார்?**



அ. கபில் தேவ்

**ஆ. K ஸ்ரீகாந்த் ☑**

இ. சுனில் கவாஸ்கர்

ஈ. திலீப் வெங்சர்க்கார்

❖ இந்திய தேசிய கிரிக்கெட் வாரியமான BCCI'ஆல் வழங்கப்பெறும் மதிப்புமிக்க 'C K நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருது'க்கு முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் தேர்வு செய்யப்பட்டுள்ளார். தமிழ்நாட்டைச்சேர்ந்த பிரபல கிரிக்கெட் வீரரான இவர், 1981 முதல் 1992 வரை இந்திய கிரிக்கெட் அணியில் இடம்பெற்றிருந்தார். இவ்விருதை இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவி அஞ்சும் சோப்ரா வழங்கவிருக்கிறார். 2020 ஜன.12ஆம் தேதி மும்பையில் நடைபெறவிருக்கும் BCCI ஆண்டுவிழாவின்போது இந்த விருது வழங்கப்படும்.

**2. IRDAIஆல் தொடங்கப்பட்ட கட்டாய நிலையான தனிநபர் சுகாதார காப்பீட்டுக் கொள்கையின் பெயர் என்ன?**




அ. ஆரோக்கிய ரக்ஷா

ஆ. ஆரோக்கிய சுரக்ஷா

**இ. ஆரோக்கிய சஞ்சீவனி ☑**

ஈ. ஆரோக்கிய சம்ரிதி

❖ 'ஆரோக்கிய சஞ்சீவனி' என்ற பெயரில் அடிப்படை காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்த, இந்திய காப்பீடு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) வலியுறுத்தியுள்ளது. இந்தத்திட்டத்தில், காப்பீட்டு நிறுவனங்கள் 'ஆரோக்கிய சஞ்சீவனி' என்ற பெயருடன் தங்கள் காப்பீட்டு நிறுவனப்பெயரைச்சேர்த்து காப்பீட்டை செயல்படுத்தவேண்டும். 2020 ஏப்.1 முதல் கிடைக்கப்பெறவுள்ள இது, காப்பீட்டாளர்களின் குறைந்தபட்ச சுகாதாரத்தேவைகளை உள்ளடக்கும்.

❖ ஓராண்டுக்கு குறைந்தபட்சம் ₹1 இலட்சம் – ₹5 இலட்சம் வரை காப்பீடு இருக்க வேண்டும். அதற்கேற்ப காப்பீட்டுத்தொகையை நிர்ணயிக்கலாம். குறைந்தபட்சம் 18 – 65 வயது வரை உள்ளவர்கள் இந்தக் காப்பீட்டில் சேரலாம்.

**3.நிர்வாகப்பணிகளுக்கு டிஜிட்டல் ஊடகத்தைப் பயன்படுத்துவதன்மூலம் தாளைச்சேமிக்கும் திட்டத்தை தொடங்கியுள்ள மாநில அரசு எது?**



அ. ஒடிசா

ஆ. கேரளா

**இ. மேற்கு வங்கம் ☑**

ஈ. தெலுங்கானா

❖ மேற்கு வங்க மாநில அரசானது தாளைச்சேமிக்கும் நோக்கில் சுற்றுச்சூழலுக்குகந்த ஒரு திட்டத்தை தொடங்கியுள்ளது. பெரும்பாலான நிர்வாகப்பணிகளுக்கு டிஜிட்டல் ஊடகத்தைப் பயன்படுத்தவும் அது முடிவுசெய்துள்ளது. தலைமைச்செயலகத்தில் ஏற்கனவே நடைமுறையிலிருக்கும் இம்முறையானது, இனி, மாநிலத்தின் பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

❖ நிர்வாக நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் தாட்களை மறுசுழற்சி செய்வதற்கும், அவற்றை எழுது அட்டைகளாக மாற்றி அவற்றை மீண்டும் பயன்படுத்துவதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இந்தச் செயல்முறையானது மாநிலத்தின் தலைமைச்செயலகத்தால் தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

**4. 2022ஆம் ஆண்டின் காமன்வெல்த் போட்டிகளை நடத்தவுள்ள நகரம் எது?**

அ. லண்டன்

ஆ. புது தில்லி

**இ. பர்மிங்காம் ☑**

ஈ. கோல்ட் கோஸ்ட்

❖ 2022ஆம் ஆண்டின் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் இங்கிலாந்தின் பர்மிங்காம் நகரத்தில் நடத்தப்படவுள்ளன. இது, காமன்வெல்த் உறுப்பினர்களுக்கான சர்வதேச விளையாட்டு நிகழ்வாகும். இந்நிகழ்வை மூன்றாவது முறையாக இங்கிலாந்து நடத்துகிறது. மதிப்புமிக்க இந்நிகழ்வானது 2020 ஜூலை 27 முதல் ஆகஸ்ட் 7 வரை நடைபெறவுள்ளது.

❖ அண்மையில், இந்திய காமன்வெல்த் விளையாட்டுக் கூட்டமைப்பானது (CGI) 2022இல் இந்தியாவில் காமன்வெல்த் துப்பாக்கிச்சுடு மற்றும் வில்வித்தைப் போட்டியை நடத்தும் திட்டத்தை சமர்ப்பித்தது. ஆனால், முன்மொழியப்பட்ட துப்பாக்கிச்சுடு போட்டியில் வெல்லும் பதக்கங்கள், இறுதிப்பட்டியலில் சேர்க்கப்படுமா எனக் கூட்டமைப்பு இன்னும் அறிவிக்கவில்லை.

**5. சமீபத்தில், மிகப்பெரிய வரிசை (Very Large Array) ஆய்வகத்தைப் பயன்படுத்தி பெரும் கருந்துளைகள் கொண்ட குள்ள விண்மீன் திரள்களை அறிவியலாளர்கள் கண்டுபிடித்தனர். இந்த ஆய்வகம், எங்கு அமைந்துள்ளது?**

அ. ஜப்பான்

ஆ. சீனா

**இ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

ஈ. ரஷ்யா



❖ அண்மையில் 'ஆஸ்ட்ரோபிசிகல் ஜர்னலில்' வெளியான ஆய்வின்படி, சில குள்ள விண்மீன் திரள்களில் 13 பெரும் கருந்துளைகளை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்த விண்மீன் திரள்கள் பூமியிலிருந்து பல ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ளன. இதில் சில விண்மீன்களில், கருந் துளைகள் அதன் மையத்தில் இல்லாமல் உள்ளன. கருந்துளைகள்கொண்ட விண்மீன்களின் உயர் – தெளிவுத்திறன் படங்கள் மிகப்பெரிய வரிசை ஆய்வகத்தைப் பயன்படுத்தி எடுக்கப்பட்டுள்ளன.

❖ இது ஒரு வானொலி தொலைநோக்கி ஆய்வகமாகும்; இது, அமெரிக்காவின் நியூ மெக்ஸிகோவில் அமைந்துள்ளது. தேசிய வானொலி வானியல் ஆய்வகத்தால் இந்த ஆய்வகம் அமைக்கப்பட்டது.

**6.புவேர்ட்டோ ரிக்கோவில் அண்மையில் ஒரு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. புவேர்ட்டோ ரிக்கோவின் தலைநகரம் எது?**

அ. சாண்டோ டொமிங்கோ

**ஆ. சான் வான் ☑**

இ. கிங்ஸ்டன்

ஈ. ஹவானா



❖ பயங்கரமான நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டதை அடுத்து புவேர்ட்டோ ரிக்கோ அரசாங்கம் சமீபத்தில் ஓர் அவசரநிலையை அறிவித்தது. கடந்த நூறாண்டுகளில் கண்டிராத அளவில் 6.4 ரிக்டர் அளவிலான மிக வலுவான மற்றும் மிகவும் அழிவுகரமான நிலநடுக்கம் அங்கு ஏற்பட்டுள்ளது. புவேர்ட்டோ ரிக்கோ என்பது கரீபியன் கடலில் அமைந்துள்ள ஒரு தீவுக்கூட்டமாகும். இது அமெரிக்காவின் இணைக்கப்படாத பிரதேசங்களுள் ஒன்றாகும். நாட்டின் மிகப்பெரிய நகரமாகவும் தலைநகராகவும் சான் வான் உள்ளது.

**7.அண்மையில், இந்தியாவின் எந்த நகரத்தில், 'தேசிய வர்த்தகர்கள் மாநாடு' நடைபெற்றது?**

அ. மும்பை

ஆ. லக்னோ

**இ. புது தில்லி ☑**

ஈ. வாரணாசி




❖ தேசிய வர்த்தகர்கள் மாநாட்டை, அண்மையில், புது தில்லியில், பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் தொடங்கிவைத்தார். 3 நாள் நடைபெறும் இந்த நிகழ்வை, அகில இந்திய வர்த்தகர்களின் கூட்டமைப்பு (CAIT) ஏற்பாடு செய்திருந்தது. வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை இந்த மாநாடு எடுத்துக் காட்டுகிறது. மாநாட்டின் 2ஆவது நாளில், மத்திய நிதியமைச்சர் கலந்துகொண்டு வர்த்தகர்களிடையே உரையாற்றினார். பண்டங்கள் மற்றும் சேவை வரி (GST) மேலும் எளிமைப்படுத்தப்படும் என்று அவர் அப்போது உறுதியளித்தார்.

**8.இந்திய ரிசர்வ் வங்கி, சமீபத்தில், எந்த வகை வங்கிகளின் 'மேற்பார்வை நடவடிக்கை கட்டமைப்பை' திருத்தியுள்ளது?**

அ. பொதுத்துறை வங்கிகள்

ஆ. தனியார் துறை வங்கிகள்

இ. வெளிநாட்டு வங்கிகள்

**ஈ. நகர கூட்டுறவு வங்கிகள் ☑**



❖ இந்திய ரிசர்வ் வங்கி, அண்மையில், நகர கூட்டுறவு வங்கிகளுக்கான பல்வேறு நிபந்தனைகளை வெளியிட்டது. ரிசர்வ் வங்கியால் அறிவிக்கப்பட்ட சில நிபந்தனைகளின் அடிப்படையில் ஒரு நகர

கூட்டுறவு வங்கியானது மேற்பார்வை நடவடிக்கை கட்டமைப்பில் வைக்கப்படும். இதில் நிகர NPA 6 சதவீதத்தைவிட அதிகமாகவும், CRR விகிதம் 9 சதவீதத்துக்கு குறைவாகவும் இருக்கும் நகர கூட்டுறவு வங்கிகளும் அடங்கும்.

❖ நிதியழுத்தத்தைப்பொறுத்து, நகர கூட்டுறவு வங்கிகளின் கடன் அதிகாரங்களும் குறைக்கப்படலாம். பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா கூட்டுறவு வங்கி ஊழலின் பின்னணியில் இந்திய ரிசர்வ் வங்கி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இந்தப் புதிய விதிமுறைகள், நகர கூட்டுறவு வங்கிகளின் மோசமான சொத்துக்களுக்கு விரைவான தீர்வினை வழங்கும்.

**9.இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு (ISRO) ஏவவிருக்கும் புதிய ரிலே செயற்கைக்கோள் தொடரின் பெயர் என்ன?**

அ. Indian Relay Navigation Satellite System (IRNSS)

ஆ. Indian Data Relay Satellite System (IDRSS) ☑

இ. Indian Relay Satellite System (IRSS)

ஈ. Indian Relay Tracking System (IRTS)



❖ இந்தியன் டேட்டா ரிலே சேட்டிலைட் சிஸ்டம் (IDRSS) என்றழைக்கப்படும் உள்நாட்டு ரிலே செயற்கைக்கோள் தொடரானது விரைவில் ஏவப்படும் என இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் (ISRO) தலைவர் K சிவன் அண்மையில் அறிவித்தார். IDRSS என்பது ரிலே செயற்கைக்கோள்களின் தொகுப்பாகும், இது இந்திய செயற்கைக்கோள்களை தொடர்ந்து கண்காணிக்கும் மற்றும் அவற்றுடன் தகவல்களை பரிமாறிக்கொள்ளும்.

❖ முன்மொழியப்பட்ட இரண்டு செயற்கைக்கோள்களில் முதலாவது ககன்யான் திட்டத்துக்கு முன்னதாக 2020ஆம் ஆண்டு இறுதிக்குள் ஏவப்படும். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள், புதிய ரிலே செயற்கைக்கோள் தொடர்களால் தொடர்ந்து கண்காணிக்கப்படலாம்.

**10. எந்த அமைப்பினால், 'உழவர் புத்தாக்க நிதியம்' அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது?**

அ. உலக உணவு திட்டம்

ஆ. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு

இ. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

ஈ. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் ☑

❖ 'உழவர் புத்தாக்க நிதியமானது' அடுத்த நிதியாண்டுக்குள் அமைக்கப்படும் என இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் (ICAR) தலைமை இயக்குநர், அண்மையில், அறிவித்தார். தேசிய அறிவியல் மாநாட்டின் ஒருபகுதியாக ஏற்பாடு செய்யப்பட்ட முதலாவது உழவர் அறிவியல் மாநாட்டின்போது இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. புது தில்லியில் ஒரு புத்தாக்க மையம் நிறுவப்படும் என அவர் அறிவித்தார்.

❖ இது, உழவர்களின் ஆராய்ச்சிக்கு உதவும் மற்றும் உழவர்களின் கண்டுபிடிப்புகளை அங்கீகரிக்கும். தற்சமயம், வேளாண்மை அறிவியல் மையங்களே உழவர்களின் கண்டுபிடிப்புகளை பதிவுசெய்து வருகின்றன.

# நடப்பு நிகழ்வுகள்

**1.சமீபத்தில், இந்தியாவின் பல்வேறு நீதிமன்றங்களைப் பாதுகாப்பதற்காக எப்படையை பயன்படுத்துவது குறித்து பரிசீலிக்குமாறு இந்திய உச்சநீதிமன்றம் மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது?**

அ. மத்திய சேமக்காவல் படை (CRPF)

**ஆ. மத்திய தொழிற்சாலை பாதுகாப்புப் படை (CSIF) ☑**

இ. தேசிய பாதுகாப்புப் படை (NSG)

ஈ. இந்திய இராணுவம்

❖ உள்ளூர் காவல்படைகளிடமிருந்து நீதிமன்றங்களை பாதுகாக்கும் பணியை ஏற்றுக்கொண்டு இந்தியாவின் பல்வேறு நீதிமன்றங்களை பாதுகாப்பதற்காக மத்திய தொழிற்சாலை பாதுகாப்புப் படையை (CSIF) பயன்படுத்தப்படுவது குறித்து பரிசீலிக்குமாறு உச்சநீதிமன்றம் அண்மையில் மத்திய அரசிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

**2. 2020 ஜனவரி 9 அன்று, ஹர் கோவிந்த் கொரானாவின் பிறந்தநாள் அனுசரிக்கப்பட்டது. அவர் எந்த ஆண்டில் உடலியலுக்கான நோபல் பரிசை வென்றார்?**



அ. 1965

**ஆ. 1968 ☑**

இ. 1972

ஈ. 1979

❖ செல்லின் மரபணுக்குறியீட்டைக் எடுத்துச்செல்வதோடு அவற்றின் புரதங்களின் தொகுப்பைக் கட்டுப்ப –டுத்தும் நியூக்ளிக் அமிலங்களில், நியூக்ளியோடைட்களின் வரிசையைக்காட்டும் ஆராய்ச்சியை மேற் –கொண்டதற்காக, ஹர் கோவிந்த் கொரானா, 1968ஆம் ஆண்டின் உடலியல் / மருத்துவத்திற்கான நோபல் பரிசை மார்ஷல் W நிரன்பெர்க் மற்றும் ராபர்ட் W ஹோலி ஆகியோருடன் பகிர்ந்துகொண்டார். 1972ஆம் ஆண்டில், முதல் செயற்கை மரபணுவையும் அவர் உருவாக்கினார்.

**3.அஷ்வானி லோகானி தலைமையிலான வானூர்தி நிறுவனம் எது?**

அ. இண்டிகோ

ஆ. ஸ்பைஸ்ஜெட்

**இ. ஏர் இந்தியா ☑**

ஈ. விஸ்தாரா

❖ தற்போது, அஷ்வானி லோகானி ஏர் இந்தியாவுக்கு தலைமைதாங்குகிறார். 1932ஆம் ஆண்டில் டி ஹவில்லேண்ட் புஸ் மோத் மோனோபிளேன் என்ற ஒற்றைப்பொறி எந்திரத்துடன் இந்த நிறுவனம் செயல்படத்தொடங்கியது. கடந்த அக்டோபரில், A320 விமானத்தில் டாக்ஸிபோட்டைப்பயன்படுத்திய உலகின் முதல் வானூர்தி நிறுவனமாகவும் இது அமைந்தது.

❖ அண்மையில், புது தில்லியில், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், ஏர் இந்தியா விமான நிறுவனத்தின் பங்குகளை தனியாருக்கு விற்கும் நடவடிக்கை தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு, ஏர் இந்தியா பங்குகளை விற்கும் பரிந்துரைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்தக் கூட்டத்தில், ஏர் இந்தியா விமான சேவை நிறுவனத்தின் தற்போதைய ₹60,000 கோடி கடனை 'சிறப்புத் தேவைக்கான வாகன' கணக்கில் சேர்க்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**4. 2019–20ஆம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியின் முதலாவது முன்கூட்டிய மதிப்பீடுகளின்படி, இந்தியாவின் திட்டமிடப்பட்ட வளர்ச்சி விகிதம் என்ன?**

அ. 5% ☑




ஆ. 5.5%

இ. 6%

ஈ. 6.5%

❖ 2020 ஜனவரி முதல் வாரத்தில், 2019–20ஆம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சியின் முதலாவது முன்கூட்டிய மதிப்பீடுகளை அரசு வெளியிட்டுள்ளது. அதில், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (GDP) ஐந்து சதவீதமாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்தாண்டு கணிப்பில் இது ஏழு சதவீதம் எனக் கணிக்கப்பட்டிருந்தது. முந்தைய நிதியாண்டில் இது 6.8% எனக் கணிக்கப்பட்டிருந்தது.

**5.இந்தியாவின் காலநிலை குறித்த இந்திய வானிலை ஆய்வுமையத்தின் (IMD) அறிக்கையின்படி, இந்தியாவின் மேற்குக் கடற்கரையில், அரபிக்கடலில், 1902ஆம் ஆண்டுக்குப்பிறகு 400 சதவீதம் அதிக சூறாவளிகள் உருவாகியுள்ளன. 2019ஆம் ஆண்டில் அரபிக்கடலைத் தாக்கிய 5 sசூறாவளிகள் எவை?**

அ. வாயு, பபுக், கியார், புல்புல் மற்றும் பவன்




ஆ. வாயு, பபுக், கியார், புல்புல் மற்றும் பானி

இ. பபுக், வாயு, கியார், புல்புல் மற்றும் பானி

**ஈ. வாயு, ஹிக்கா, கியார், மகா மற்றும் பவன் ☑**

❖ இந்தியாவின் காலநிலைகுறித்த இந்திய வானிலை ஆய்வுமையத்தின் 2019 ஆண்டறிக்கையின்படி, அரபிக்கடலில் சாதரணமாக ஏற்படும் புயல்களின் எண்ணிக்கையைவிட 400% அதிகமாக 2019ஆம் ஆண்டில் புயல்கள் ஏற்பட்டுள்ளன. எட்டில் சுமார் ஐந்து சூறாவளிகள் (வாயு, ஹிக்கா, கியார், மகா மற்றும் பவன்) அரபிக்கடலை பாதித்துள்ளன.

❖ இந்தியாவின் மேற்குக்கடற்கரையில் கடல் பொதுவாக ஆண்டுதோறும் ஒரேயொரு சூறாவளியை மட்டுமே சந்திக்கும். (இந்தியாவில் பொதுவாக ஒவ்வோர் ஆண்டும் மொத்தம் ஐந்து புயல்கள் ஏற்படும்) கடந்த ஆண்டில் மட்டும் வங்காள விரிகுடாவை (பொதுவாக இந்தியாவில் சூறாவளி அதிகம் தாக்கும் கடற்கரை) மூன்று புயல்கள் (பபுக், பானி, புல்புல்) தாக்கியுள்ளன.

**6.தேர்தல் ஆணையம், சமீபத்தில், 2020 பிப்.8ஆம் தேதியை தில்லி சட்டமன்றத் தேர்தல் நடைபெறும் தேதியாக அறிவித்தது. தில்லி சட்டமன்றத்தில் உள்ள மொத்த இடங்களின் எண்ணிக்கை எவ்வளவு?**



அ. 65

ஆ. 67

**இ. 70 ☑**

ஈ. 72

❖ 2020 பிப்.8ஆம் தேதி நடைபெறவுள்ள தில்லி சட்டமன்றத்தேர்தலில் சுமார் 1.46 கோடி வாக்காளர்கள் (80.55 இலட்சம் ஆண்கள் + 66.35 இலட்சம் பெண்கள்) வாக்களிக்கவுள்ளனர். தேர்தல் முடிவுகள் 2020 பிப்.11ஆம் தேதியன்று அறிவிக்கப்படும். தில்லி சட்டமன்றத்தில் 70 இடங்கள் உள்ளன. கடந்த தேர்தலில் 67 இடங்களை வென்றதன்மூலம் ஆம் ஆத்மி ஆட்சியமைத்தது குறிப்பிடத்தக்கது.

**7.வடகிழக்கு இயற்கைவாயு குழாய் கட்டமைப்பானது 5 இந்திய மத்திய பொதுத்துறை நிறுவனங்களின் கூட்டுமுயற்சியால் செயல்படுத்தப்படவுள்ளது. இந்தக் கூட்டு நிறுவனத்தின் பெயர் என்ன?**

அ. வடகிழக்கு எரிவாயு கட்டமைப்புக் கழகம் (NEGGC)

ஆ. இந்தியன் எரிவாயு கட்டமைப்பு நிறுவனம் (IGGC)

**இ. இந்திரதனுஷ் எரிவாயு கட்டமைப்பு நிறுவனம் (IGGL) ☑**

ஈ. பாரத் எரிவாயு கட்டமைப்பு நிறுவனம் (BL)

❖ வடகிழக்கு இயற்கை எரிவாயு குழாய் கட்டமைப்புத் திட்டமானது இந்திரதனுஷ் எரிவாயு கட்டமைப்பு நிறுவனத்தின், 5 கூட்டு நிறுவனத்தால் (GAIL, IOCL, ONGC, OIL மற்றும் NRL) செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான குழாய் பாதை மொத்த நீளம் 1,656 கி.மீ., திட்டச்செலவினம் சுமார் ₹9,265 கோடி (கட்டுமானத்தின்போது வட்டி உட்பட).

❖ திட்டத்தின்படி வடகிழக்கு மண்டலத்திலுள்ள அருணாச்சலபிரதேசம், அஸ்ஸாம், மணிப்பூர், மேகாலயா, மிசோராம், நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா ஆகிய எட்டு மாநிலங்களில் இயற்கை எரிவாயு குழாய் பாதை கட்டமைப்பு உருவாக்கப்படும்.

**8.அண்மையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட கனிமச்சட்டங்கள் (திருத்தம்) அரசாணை, 2020 ஆனது எந்த கனிம / இயற்கை வளத்துக்கான இறுதிப்பயன்பாட்டு அளவுகோல்களை நீக்கியுள்ளது?**



**அ. நிலக்கரி ☑**

ஆ. வாயு நீரேற்றிகள்

இ. இயற்கை எரிவாயு

ஈ. கச்சா எண்ணெய்

❖ ஜன.8 அன்று, மத்திய அமைச்சரவை, கனிமச்சட்டங்கள் (திருத்தம்) அரசாணை, 2020ஐ அங்கீகரிக்க ஒப்புதல் அளித்துள்ளது. இந்த அரசாணை, சுரங்கங்கள் மற்றும் தாதுக்கள் (மேம்பாடு & ஒழுங்குமுறை) சட்டம், 1957 மற்றும் நிலக்கரிச்சுரங்கங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம், 2015 ஆகியவற்றை திருத்தும்.

❖ தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் முந்தைய ஒப்புதலின் தேவையையும் இது நீக்கிவிடும். அரசின் கூற்றுப்படி, இது, திட்டங்களை செயல்படுத்துதல், வணிகத்தை எளிதாக்குவது, நடைமுறைகளை எளிதாக்குவது மற்றும் தாதுக்கள் அமைந்துள்ள பகுதிகளில் உள்ள அனைத்துத் தரப்பினருக்கும் பயனளிக்கும்.

**9. 2009ஆம் ஆண்டிலிருந்து மலேசியா மாஸ்டர்ஸ் பூப்பந்து போட்டியில் இந்தியா எத்தனைமுறை வென்றுள்ளது?**

அ. இரண்டு

**ஆ. மூன்று ☑**

இ. ஐந்து

ஈ. பத்து

❖ 2009ஆம் ஆண்டில் தொடங்கியதிலிருந்து மலேசியா மாஸ்டர்ஸ் பூப்பந்து போட்டியில், இந்தியா, மூன்று முறை வென்றுள்ளது. P V சிந்து 2013 & 2016ஆம் ஆண்டுகளிலும், சாய்னா நேவால் 2017ஆம் ஆண்டிலும் வென்றார். இந்த ஆண்டு, B சாய் பிரனீத் ஏற்கனவே நாக்–அவுட் செய்யப்பட்டுள்ளார்.

**10.சமீபத்தில், பிற நாடுகளுடனான குற்றவியல் விஷயங்களில் பரஸ்பர சட்ட உதவிக்கான திருத்தப்பட்ட வழிகாட்டுதல்களை இந்திய அரசு வெளியிட்டுள்ளது. தற்போது (ஜனவரி, 2020) இந்தியாவில், எத்தனை நாடுகளுடனான பரஸ்பர சட்ட உதவி ஒப்பந்தங்கள் உள்ளன?**



அ. 32

ஆ. 40

**இ. 42 ☑**

ஈ. 48

❖ இந்தியா 42 நாடுகளுடன் பரஸ்பர சட்ட உதவி ஒப்பந்தங்களைக்கொண்டுள்ளது மற்றும் குற்றவியல் விஷயங்களில் ஒத்துழைப்புக்காக பல்வேறு பன்னாட்டுத் தீர்மானங்களில் கையெழுத்திட்டுள்ளது. உள்துறை அமைச்சகம் இதற்கென நியமிக்கப்பட்ட மத்திய அரசின் அதிகார மையமாகும். அண்மையில் திருத்தப்பட்ட இந்த வழிகாட்டுதல்கள், பல்வேறு சட்டம் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களை ஒருங்கிணைத்துள்ளன. மேலும், ஆவணங்களை பன்னாட்டுத் தேவைகளுக்கு இணங்க வைப்பதை அது நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ இந்தத் திருத்தப்பட்ட வழிகாட்டுதல்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக கோரிக்கை கிடைத்த பத்து நாட்களுக்குள் வெளிநாட்டு அதிகாரிகளுக்கு ஆவணங்களை வழங்குவதற்கான ஏற்பாடும் உள்ளது.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ தமிழ்நாடு முழுவதும் வரும் ஜன.19ஆம் தேதி நடைபெறவுள்ள இளம்பிள்ளைவாத நோய் (போலியோ) முகாம்கள்மூலம் மொத்தம் 72 இலட்சம் குழந்தைகளுக்கு சொட்டுமருந்து வழங்க இலக்கு நிர்ணயிக்கப் –பட்டுள்ளது. கடந்த 16 ஆண்டுகளாக போலியோ அற்றதாக தமிழ்நாடு உள்ளது.

❖ கீழடி ஆய்வறிக்கையை தமிழ், ஆங்கிலம், சமற்கிருதம், ஹிந்தி உள்ளிட்ட 24 மொழிகளில் நூலாகத் தமிழ்நாட்டின் தொல்லியல் துறை வெளியிட்டுள்ளது.




❖ எள் சாகுபடியில் அதிக மகசூல் ஈட்டிய நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி பாப்பாத்தி (61), பாரதப்பிரதமரிடம் 'முன்னோடி விவசாயி' எனும் பாராட்டுச்சான்றிதழ் பெற்று சாதனை படைத்துள்ளார்.

## நடப்பு நிகழ்வுகள்

**1. LGBT சமூகத்திற்காக பிரத்யேக மாநில அளவிலான நீதிமன்றத்தை நடத்த முடிவுசெய்துள்ள மாநிலம் எது?**



அ. தெலுங்கானா

ஆ. மகாராஷ்டிரா

**இ. கேரளா ☑**

ஈ. குஜராத்

❖ Lesbian, Gay, Bi–sexual, Transgender (LGBT) சமூகத்திற்காக மாநில அளவிலான நீதிமன்றத்தை நடத்துவதாக கேரள மாநில இளையோர் ஆணையம் அறிவித்துள்ளது. இந்நிகழ்ச்சி அம்மாநிலத்தின் தலைநகரமான திருவனந்தபுரத்தில் நடைபெறவுள்ளது.

❖ திருநங்கைகள் தங்களின் குறைகளை வெளிக்கொணர ஊக்குவிப்பதும், பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகளை செய்வதுமே இந்நீதிமன்றத்தின் முக்கிய நோக்கமாகும். கடந்த 2015ஆம் ஆண்டில், கேரள மாநில அரசு ஒரு 'திருநங்கைக் கொள்கை'யை அறிமுகப்படுத்தியது. மேலும், இது, மாநில சமூக நீதித்துறையின்கீழ் இயங்கும் ஒரு பிரத்யேக 'திருநங்கைப்பிரிவையும்' கொண்டுள்ளது.

**2. வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ள தாய்மார்கள் தங்களின் குழந்தைகளை படிக்கவைப்பதற்காக "அம்மா வோடி" என்னும் திட்டத்தை தொடங்கியுள்ள மாநிலம் எது?**



அ. தெலுங்கானா

**ஆ. ஆந்திரபிரதேசம் ☑**

இ. கேரளா

ஈ. குஜராத்

❖ ஆந்திரபிரதேச மாநில முதலமைச்சர் ஜெகன்மோகன் ரெட்டி, 'ஜெகனண்ணா அம்மா வோடி' என்ற திட்டத்தை தொடங்கிவைத்துள்ளார். இத்திட்டத்தின்படி, குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பும் 43 லட்சம் தாய்மார்களுக்கு ஆண்டுதோறும் ₹15,000 வழங்கப்படும். இதற்காக நடப்பாண்டில் ₹6318 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் வரையில் இந்தப் பணம், ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி மாதத்தில் தாய்மார்களின் வங்கிக்கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்.

**3. 2020 மார்ச்சில் நடைபெறவுள்ள 'மிலன்' என்னும் பன்னாட்டு கடற்படைப்பயிற்சியை நடத்தவுள்ள நகரம் எது?**



அ. கோவா

**ஆ. விசாகப்பட்டினம் ☑**

இ. கொச்சின்

ஈ. மும்பை

❖ 'மிலன்' என்பது பலதரப்பட்ட கடற்படைப்பயிற்சியாகும். இது, எதிர்வரும் 2020 மார்ச் மாதத்தில், விசாகப்பட்டினத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிகழ்வு, முன்னர், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் நடத்த திட்டமிடப்பட்டது; பின்னர், பல நாடுகளைச் சேர்ந்த கடற்படைகள் இந்த நிகழ்வில் பங்கேற்பதால் விசாகப்பட்டினத்திற்கு மாற்றப்பட்டது. கிட்டத்தட்ட 30 நாடுகளின் கடற்படைகள் இந்த நிகழ்வில் பங்கேற்பதை உறுதிப்படுத்தியுள்ளன.

❖ "Synergy Across the Seas" என்பது இந்தப் பன்னாட்டுக் கடற்படைப் பயிற்சியின் கருப்பொருளாகும். கடற்படையினருக்கு தொழிற்முறை கலந்துரையாடல்களை மேற்கொள்ளவும், உலகெங்கும் உள்ள கடற்படைகளின் சிறந்த நடைமுறைகளை அறியவும் இந்நிகழ்வு உதவும்.

**4. AI அடிப்படையிலான முக அங்கீகார தொழில்நுட்பம், அண்மையில், மன்மத் மற்றும் பூசாவல் இரயில் நிலையங்களில் நிறுவப்பட்டுள்ளன. இவ்விரு இரயில் நிலையங்களும் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. மத்தியபிரதேசம்

**ஆ. மகாராஷ்டிரா ☑**

இ. கர்நாடகா

ஈ. குஜராத்



❖ இந்திய இரயில்வே ஆனது மகாராஷ்டிராவின் மன்மத் மற்றும் பூசாவல் மற்றும் கர்நாடக மாநிலத்தின் பெங்களூரு இரயில் நிலையத்தில் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான முக அங்கீகார தொழில்நுட்பத்தை நிறுவியுள்ளது. இரயில்வே அமைச்சகத்தின்கீழ் உள்ள பொதுத்துறை நிறுவனம், வீடியோ கண்காணிப்பு அமைப்பை முக அங்கீகாரம் மற்றும் வீடியோ பகுப்பாய்வுகளுடன் வழங்கும் திட்டத்தை இரயில்டெல் மேற்கொள்கிறது.

❖ இந்த முக அங்கீகார முறையின் வெளியீட்டை இரயில்வே பாதுகாப்புப்படை (RPF) தனது தற்போதைய குற்றவியல் தரவுத்தளத்துடன் இணைக்கும். இதன்மூலம், இரயில் நிலையங்களில் குற்றவாளிகளை அடையாளங்காண்பதும் எளிதாகிவிடும்.

**5. உலகின் மிகவுயர்ந்த இரயில்பாலம் கட்டப்படவுள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

அ. ஹிமாச்சலபிரதேசம்

ஆ. உத்தரகண்ட்

இ. சிக்கிம்

**ஈ. ஜம்மு – காஷ்மீர் ☑**




❖ காஷ்மீர் பள்ளத்தாக்கை இந்திய இரயில்வே வலையமைப்புடன் இணைக்கும் முக்கிய உதம்பூர் – ஸ்ரீநகர் – பாரமுல்லா இரயில் இணைப்புத் திட்டத்தின் ஒருபகுதியாக, பக்கல் மற்றும் கௌரியை இணைக்கும் வகையில் ஒரு புதிய இரயில் பாலம் கட்டப்படவுள்ளது.

❖ ஜம்மு – காஷ்மீரின் புதிதாக உருவாக்கப்பட்ட யூனியன் பிரதேசத்தில் கட்டப்படவுள்ள இந்த இரயில் பாலம் உலகின் மிகவுயர்ந்த இரயில் பாலமாக இருக்கும். 2021 டிசம்பர் மாதத்துக்குள் இந்தத் திட்டம் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

❖ திட்டமிடப்பட்டுள்ள இப்பாலம் 1.315 கி.மீ நீளங்கொண்டதாக இருக்கும். ஆற்றுப்படுகையிலிருந்து 359 மீட்டர் உயரத்தில் இது கட்டப்படும். தற்போது, வரை உலகின் மிகவுயர்ந்த இரயில் பாலமாக சீனாவின் பீபன் ஆற்றின்மீது கட்டப்பட்டுள்ள சுய்பாய் இரயில் பாலம் உள்ளது.

**6. உலக ஹிந்தி நாள், கொண்டாடப்படும் தேதி எது?**

அ. ஜனவரி 8

ஆ. ஜனவரி 9

**இ. ஜனவரி 10 ☑**

ஈ. ஜனவரி 11

हिंदी

❖ விஸ்வ ஹிந்தி திவாஸ் அல்லது உலக ஹிந்தி நாளானது ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 10 அன்று கொண்டாடப்படுகிறது. 1975ஆம் ஆண்டு ஜன.10–12 வரை நாக்பூரில் நடைபெற்ற முதலாவது உலக ஹிந்தி மாநாட்டை நினைவுகூரும் வகையில் இந்நாள் கொண்டாடப்படுகிறது. இம்முதலாவது ஹிந்தி மாநாட்டை அப்போதைய இந்தியப்பிரதமர் இந்திராகாந்தி தொடங்கிவைத்தார்.

❖ முதலாவது உலக ஹிந்தி நாள் 2006 ஜன.10 அன்று அனுசரிக்கப்பட்டது. இந்நாள் உலகம் முழுவதும் ஹிந்தியை கொண்டுசெல்வதை நோக்கமாகக்கொண்டுள்ளது. ஹிந்திமொழி பேசாத பிறமொழிவழி தேசிய இனத்தினரின் எதிர்ப்பையும் மீறி, ஹிந்திய அரசு ஹிந்தி மொழியை அலுவல் மொழியாக, 1949 செப்டம்பர் 14 அன்று ஏற்றுக்கொண்டது.

**7. 'முப்பவரப்பு வெங்கைய நாயுடு சிறப்பு தேசிய விருது'க்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?**

அ. K சிவன்

**ஆ. M S சுவாமிநாதன் ☑**

இ. அசிம் H பிரேம்ஜி

ஈ. டூட்டி சந்த்



❖ 'பசுமைப்புரட்சி'யின் தந்தை Dr. M S சுவாமிநாதன், 'முப்பவரப்பு வெங்கைய நாயுடு சிறப்பு தேசிய விருது' பெற்றவராக தேர்வுசெய்யப்பட்டுள்ளார். இவ்விருதை ஹைதராபாத்தை தளமாகக்கொண்ட முப்பவரப்பு அறக்கட்டளை நிறுவியுள்ளது. பிரபல வேளாண் விஞ்ஞானியும் தாவர மரபியலாளருமான M S சுவாமி நாதன் அவர்கள் விவசாயத்துறையில் ஆற்றிய பங்களிப்புகளுக்காக இவ்விருதைப் பெற்றார்.

❖ இந்த விருது, ஹைதராபாத்தில் நடைபெற்ற முப்பவரப்பு அறக்கட்டளையின் 10ஆவது ஆண்டுவிழாவின் போது இந்திய குடியரசுத்துணைத்தலைவர் வெங்கையா வழங்கினார்.

**8. நரிவால் மந்தாரையை (Foxtail Orchid) கொண்டிருக்கும் இலச்சினையை தனது சட்டமன்றத்தின் புதிய இலச்சினையாக அண்மையில் ஏற்றுக்கொண்ட மாநிலம் எது?**

அ. அஸ்ஸாம் ஆ. ஹிமாச்சலபிரதேசம்

**இ. அருணாச்சலபிரதேசம் ☑** ஈ. மிசோரம்

ARUNACHAL PRADESH LEGISLATIVE ASSEMBLY · ITANAGAR ·

❖ அருணாச்சலபிரதேச மாநிலம் தனது சட்டமன்றத்திற்கு புதிய இலச்சினையை ஏற்றுக்கொண்டுள்ளது. இந்தப் புதிய இலச்சினை (logo), மாநிலத்தின் தனித்துவமான அடையாளத்தையும் கலாசாரத்தையும் பிரதிபலிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. சட்டமன்ற அவைத்தலைவர் PD சோனா, இப்புதிய இலச்சினையின் படங்களை அவை உறுப்பினர்களிடையே காண்பித்தார். இப்புதிய இலச்சினையில், தேசியச்சின்னமும் அருணாச்சலபிரதேச மாநிலத்தின் மாநில மலரான, நரிவால் மந்தாரையும் உள்ளது.

**9.எந்த மாநிலத்தில் உள்ள ஆயுர்வேத பல்கலைக்கழகத்தின் நிறுவனங்கள், "தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள்" என்ற தகுதியைப்பெறவுள்ளன?**

அ. தமிழ்நாடு

ஆ. கேரளா

**இ. குஜராத் ☑**

ஈ. சிக்கிம்




❖ ஜாம்நகரில் உள்ள குஜராத் ஆயுர்வேத பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள ஆயுர்வேத கல்வி நிறுவனங்கள் தொகுப்புக்கு, "தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கல்விநிறுவனங்கள்" என்னும் தகுதியை வழங்குவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இதற்கான மசோதா வரவிருக்கும் நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் அறிமுகம் செய்யப்படும்.

❖ இந்தியாவில் பொது சுகாதார சவால்களை எதிர்கொள்ள ஆயுஷ் முறைகளின் பங்களிப்பு அதிகரித்து வருவதைக் கருத்தில்கொண்டு "தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது" என்னும் தகுதியை வழங்குவது பொதுநலத்தில் ஆயுர்வேதத்தின் பங்களிப்பை அதிகப்படுத்த உதவும். ஆயுர்வேத முறைகளின் தடுப்பு மற்றும் குணப்படுத்தும் அணுகுமுறைகளால் குறைந்த செலவில் உடல்நலம் கிடைக்கும். இதனால் ஆயுர்வேதத்தை வலுப்படுத்துவது, அரசின் செலவினத்தையும் குறைக்கும்.

**10.உலக வங்கியால் மதிப்பிடப்பட்டபடி, 2020-21ஆம் நிதியாண்டுக்கான (FY20) இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் என்ன?**

அ. 6 %

**ஆ. 5.8 % ☑**

இ. 2 %

ஈ. 1.5 %




❖ உலக வங்கி, அண்மையில் தனது "ஜனவரி 2020 உலகளாவிய பொருளாதார வாய்ப்பு அறிக்கை'யை வெளியிட்டது. அதில், நடப்பு நிதியாண்டில் (2019-20) நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5 சதவீதமாக இருந்தாலும், வரும் நிதியாண்டில் (2020-21) இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 5.8% ஆக உயரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வங்கி சாராத நிதி நிறுவனங்களின் மந்தநிலையே இதற்குக்காரணமாக அமைந்துவிட்டது என உலக வங்கி தெரிவித்துள்ளது. நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 5% ஆக இருக்கும் என மத்திய அரசு அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- காவிரி ஆற்றங்கரையில் அமைந்துள்ள திருவையாற்றில் ஸ்ரீதியாகராஜர் 173ஆவது ஆராதனை விழா தொடங்கியது.
- தொலைத்தொடர்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் சென்னை–அந்தமான் தீவுகளுக்கு இடையே ₹1,224 கோடியில் சுமார் 2,250 கிலோ மீ., தொலைவுக்கு கடலுக்கடியில் கண்ணாடியிழை கம்பி வடம் பதிப்பதற்கான திட்டப்பணியை மத்திய தொலைத்தொடர்பு & தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் இரவிசங்கர் பிரசாத் சென்னையில் தொடக்கிவைத்தார்.

## நடப்பு நிகழ்வுகள்

**1.எந்த இந்திய அரசியல் தலைவரின் வாழ்க்கைகுறித்த, 'கர்மயோதா கிரந்த்' என்ற நூலை அண்மையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வெளியிட்டார்?**

அ. அடல் பிகாரி வாஜ்பாய்

**ஆ. நரேந்திர மோடி ☑**

இ. LK அத்வானி

ஈ. அருண் ஜெட்லி



❖ உள்துறை அமைச்சர் அமித் ஷா, அண்மையில், 'கர்மயோதா கிரந்த்' என்ற நூலை வெளியிட்டார். இந்தியாவின் தற்போதைய பிரதமரான மோடியின் வாழ்க்கையை அடிப்படையாகக்கொண்டது இந்த நூல். நூல்வெளியீட்டு நிகழ்வின்போது, நரேந்திர மோடியின் தலைமைப்பண்புகளை சிறப்பித்து அமித் ஷா உரையாற்றினார். 2014ஆம் ஆண்டு முதல் இந்தியாவின் பதினான்காவது பிரதமராக இருந்து வருகிறார் மோடி. அதற்கு முன்னர், அவர், 2001 முதல் குஜராத் மாநில முதலமைச்சராக இருந்தார்.

**2. 'பூர்வோதயா' எனப்படும் கிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கான திட்டத்தைத் தொடங்கவுள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ. சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம்

ஆ. வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகம்

இ. வட கிழக்கு மண்டல மேம்பாட்டு அமைச்சகம்

**ஈ. எஃகு அமைச்சகம் ☑**



❖ "பூர்வோதயா – ஒருங்கிணைந்த எஃகு மையத்தின்மூலம் கிழக்குப் பிராந்தியத்தின் விரைவான வளர்ச்சி" என்ற திட்டத்தை மத்திய எஃகு அமைச்சகம் தொடங்கவுள்ளது. எஃகு மற்றும் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சரான தர்மேந்திர பிரதான் இந்தத் திட்டத்தைத் தொடங்கிவைப்பார்.

❖ இந்தியாவின் கிழக்கு மாநிலங்களான ஒடிசா, ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், மேற்கு வங்கம் மற்றும் வடக்கு ஆந்திரபிரதேசம் ஆகியவை பெருமளவு எஃகு இருப்புக்களைக் கொண்டிருந்த போதிலும் வளர்ச்சியில் பின்தங்கிய நிலையில் உள்ளன. இந்த ஒருங்கிணைந்த எஃகு மையமானது கிழக்குப் பிராந்தியத்தில் ஓர் ஒருங்கிணைந்த சமூக–பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

**3.மத்திய விளையாட்டு அமைச்சகமானது இலக்னோவில் 23ஆவது தேசிய இளையோர் விழாவை ஏற்பாடு செய்யவுள்ளது. எந்தப் பிரபலமான ஆளுமையின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் இது கொண்டாடப்படவுள்ளது?**

அ. A P J அப்துல் கலாம்

**ஆ. சுவாமி விவேகானந்தர் ☑**

இ. B R அம்பேத்கர்

ஈ. பகத் சிங்



- இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகமானது 23ஆவது தேசிய இளையோர் விழாவை உத்தரபிரதேச மாநில அரசுடன் இணைந்து இலக்னோவில் ஜன.12 முதல் 16 வரை நடத்த உள்ளது. கொல்கத்தாவைச் சேர்ந்த பிரபல துறவியான சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் இவ்விழா கொண்டாடப்படுகிறது.

- சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாளான ஜன.12 தேசிய இளையோர் நாளாகவும், அந்நாளிலிருந்து அதற்கடுத்து வரும் ஒருவாரகாலம் தேசிய இளையோர் வாரமாகவும் கொண்டாடப்படுகிறது. இதன் போது, இளையோருக்கென பல்வேறு போட்டிகள் நடத்தப்படுகின்றன; மேலும், தேசிய இளையோர் விருதுகளும் அப்போது வழங்கப்படுகின்றன.

**4.இந்திய எரிசக்திக் கொள்கைகளின் முதல் விரிவான ஆய்வு, அண்மையில், எந்தச்சர்வதேச அமைப்பால் வெளியிடப்பட்டது?**

அ. உலக எரிசக்திக் கழகம்

**ஆ. பன்னாட்டு எரிசக்தி முகமை ☑**

இ. பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு

ஈ. பன்னாட்டு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனம்

- பன்னாட்டு எரிசக்தி முகமையானது (IEA) அண்மையில் இந்திய மதியுரையகமான NITI ஆயோக்குடன் இணைந்து இந்தியாவின் எரிசக்திக் கொள்கைகளின் முதல் விரிவான மதிப்பாய்வை வெளியிட்டது. புது தில்லியில் உள்ள NITI ஆயோக் தலைமையகத்தில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. பாரிஸை தளமாகக்கொண்ட பன்னாட்டு எரிசக்தி முகமையின் சங்க உறுப்பினராக கடந்த 2017ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தியா சேர்க்கப்பட்டபிறகு வெளியிடப்படும் முதல் மதிப்பாய்வாகும் இது.

- இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையின் வளர்ச்சியை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது. நாட்டின் மொத்த நிறுவப்பட்ட திறனில் கிட்டத்தட்ட 23% புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சார்ந்ததாகும்.

**5.கற்றல் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான சிறப்பு உரை–நூல்களைத் தயாரிக்கவுள்ளதாக சமீபத்தில் அறிவித்துள்ள மாநில அரசு எது?**

அ. மகாராஷ்டிரா

**ஆ. உத்தரபிரதேசம் ☑**

இ. கேரளா

ஈ. மத்தியபிரதேசம்

- கற்றல் குறைபாடுகளுடைய குழந்தைகளுக்காக சிறப்பு உரை–நூல்கள் தயாரிக்கப்படும் என உத்தர பிரதேச மாநில அரசு அண்மையில் அறிவித்தது. டவுன் நோய்க்குறி, கவனப்பற்றாக்குறை கோளாறு, ஆட்டிசம் மற்றும் டிஸ்லெக்ஸியா போன்ற குறைபாடுகள் காரணமாக அறிவுசார் குறைபாடுகள் உள்ள குழந்தைகள் அரசு நடத்தும் தொடக்க மற்றும் இடைநிலைப்பள்ளிகளில் சேர்க்கப்படுவார்கள்.

- ஆங்கிலம், ஹிந்தி, கணிதம் ஆகிய பாடங்களில் ஒன்று முதல் ஐந்து வகுப்புகளுக்கான பாடநூல்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**6.பேச்சுரிமை மற்றும் இணையம் மூலம் ஒரு வணிகத்தைத் தொடங்குவதற்கான உரிமை ஆகியவை இந்திய அரசியலமைப்பின் எந்தப் பிரிவின்கீழ் வருகின்றன?**

அ. பிரிவு 17

ஆ. பிரிவு 18

**இ. பிரிவு 19 ☑**

ஈ. பிரிவு 20



- ❖ அரசியலமைப்புப் பிரிவு 19 (1) (a) – பேச்சு மற்றும் கருத்துச் சுதந்தரத்திற்கான உரிமையை அளிக்கிறது. அதேநேரத்தில், அதன் துணைப்பிரிவு (g) – எந்தவொரு தொழிலையும் பழகுவதற்கான அல்லது எந்தவொரு தொழில், வர்த்தகம் / வணிகத்தையும் மேற்கொள்வதற்கான உரிமையை வழங்குகிறது.
- ❖ 19 (1) (a) மற்றும் 19 (1) (g) பிரிவுகளின்கீழ் பேச்சு மற்றும் கருத்துச்சுதந்தரம் மற்றும் இணையம் மூலம் ஒரு வணிகத்தை மேற்கொள்வதற்கான உரிமை ஆகியவை இந்திய அரசியலமைப்பின் பாதுகாப்பைப் பெறுகின்றன என அண்மையில் இந்திய உச்சநீதிமன்றம் அறிவித்தது. ஜம்மு – காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் இணையத்திற்கு விதிக்கப்பட்ட 5 மாத தடையின் பின்னணியில் இத்தீர்ப்பு வந்துள்ளது.

**7. 'நிதியியல் உள்ளடக்கத்திற்கான தேசிய உத்தி – National Strategy for Financial Inclusion' என்ற அறிக்கை, அண்மையில் எந்த அமைப்பால் வெளியிடப்பட்டது?**

**அ. இந்திய ரிசர்வ் வங்கி ☑**

ஆ. இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம்

இ. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

ஈ. இந்திய பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம்

- ❖ இந்திய ரிசர்வ் வங்கி, அண்மையில், 'நிதியியல் உள்ளடக்கத்திற்கான தேசிய உத்தி' என்ற தலைப்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. முறையான வங்கிகளுடன் இணைந்து கொடுப்பனவு வங்கிகள், சிறு நிதி வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் நியாயவிலைக்கடைகள் போன்ற வங்கிசாரா அலகுகளும் டிஜிட்டல் வங்கியியலைப் பழகிக்கொள்ளவேண்டும் என இந்த அறிக்கை பரிந்துரைத்துள்ளது.
- ❖ 2020ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் அனைத்து கிராமங்கள் மற்றும் மலையகப்பகுதிகளிலும் விற்பனை நிலையங்களை அதிகரிக்குமாறு ரிசர்வ் வங்கி (RBI) பிற வங்கிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. 2022ஆம் ஆண்டுக்குள் பொதுக்கடன் பதிவேட்டை (Public Credit Registry) முழுமையாக செயல்பட வைக்கவும் இந்த அறிக்கை பரிந்துரைத்துள்ளது.

**8.தேசிய குற்றப்பதிவு பணியகத்தின் அண்மைய அறிக்கையின்படி, பெண்களின் பாதுகாப்பிற்கு மிகவும் அச்சுறுத்தலாக உள்ள இடம் எது?**

**அ. உத்தரபிரதேசம் ☑** ஆ. மேற்கு வங்கம்

இ. ஜார்க்கண்ட் ஈ. பீகார்



- கடந்த 2018ஆம் ஆண்டுக்கான 'இந்தியாவில் குற்றங்கள்' புள்ளிவிவரங்களின் பதிப்பை தேசிய குற்றப் பதிவு பணியகம் (NCRB) வெளியிட்டது. அறிக்கையின்படி, 59445 குற்றப்பதிவுகளுடன் பெண்களின் பாதுகாப்பிற்கு மிகவும் அச்சுறுத்தலாக உள்ள இடமாக உத்தரபிரதேசம் உள்ளது. இந்த ஆண்டில், அதிக எண்ணிக்கையிலான பாலியல் வன்புணர்வு வழக்குகள் மத்தியபிரதேச மாநிலத்திலும், மேற்கு வங்க மாநிலத்தில் அதிக எண்ணிக்கையிலான அமிலத்தாக்குதல் வழக்குகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

- கடந்த 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த 2018ஆம் ஆண்டில், இந்தியாவில், குற்றங்கள் 1.3% அதிகரித்துள்ளன என அவ்வறிக்கை கூறியுள்ளது. பெண்களுக்கு எதிரான ஒட்டுமொத்த குற்றங்களின் எண்ணிக்கையும் கடந்த மூன்றாண்டுகளில் படிப்படியாக அதிகரித்துள்ளது.

**9.அண்மையில் ஓமனின் புதிய ஆட்சியாளர் / சுல்தான் என அறிவிக்கப்பட்டவர் யார்?**



அ. காசிம் சுலைமானி

ஆ. கபூஸ் பின் சையத் அல் சையத்

**இ. ஹைதம் பின் தாரிக் ☑**

ஈ. மஜூப் ஸ்வேரி

- ஓமனின் ஆட்சியாளரும், மத்திய கிழக்கு நாடுகளில் நீண்டகாலம் பணியாற்றிய ஆட்சியாளர்களுள் ஒருவருமான சுல்தான் கபூஸ் பின் சையத் அல் சையத் சமீபத்தில் காலமானார். அவர் நீண்டகாலமாக உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் கடந்தமாதம் பெல்ஜியத்தில் மருத்துவ சிகிச்சை பெற்றுவந்தார்.

- அவரது மறைவுக்குப்பின், ஓமனின் முன்னாள் கலாசார அமைச்சர் ஹைதம் பின் தாரிக், ஓமனின் புதிய சுல்தானாக அறிவிக்கப்பட்டார். ஓமன் அரசியலமைப்புப்படி, சுல்தான் பதவி காலியான 3 நாட்களுக்குள் அவற்றை நிரப்புவது கட்டாயமாகும்.

**10. 'பருப்பு வகைகள் குறித்த கூட்டம் (The Pulses Conclave) – 2020' என்ற பெயரில் ஈராண்டுக்கு ஒருமுறை நடைபெறும் பன்னாட்டு பருப்பு மாநாடு நடைபெறவுள்ள மாநிலம் எது?**




அ. தமிழ்நாடு

ஆ. கேரளா

இ. கர்நாடகா

**ஈ. மகாராஷ்டிரா ☑**

- இந்தியாவின் பருப்பு வகைகள் மற்றும் தானியங்கள் தொழிற்துறை மற்றும் வர்த்தகத்தின் தலைமை அமைப்பான இந்திய பருப்பு வகைகள் மற்றும் தானியங்கள் சங்கமானது 'The Pulses Conclave' என அழைக்கப்படும் பன்னாட்டு பருப்பு மாநாட்டின் ஐந்தாவது பதிப்பை பிப்.12–14 வரை புனேவில் உள்ள லோனாவாலாவில் நடத்தவுள்ளது.

- இச்சங்கம் மும்பையில் அமைந்துள்ளது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பருப்புவகைகளை உற்பத்திசெய்யும் நாட்டைச் சேர்ந்தோருக்கு, இத்துறைசார்ந்த வணிக வாய்ப்புகளை ஆராய்வதற்கு இம்மாநாடு உதவும்.

# நடப்பு நிகழ்வுகள்

**1. 2020ஆம் ஆண்டின், "உலக எதிர்கால எரிசக்தி" உச்சிமாநாட்டை நடத்துகின்ற நகரம் எது?**

**அ. அபுதாபி ☑**

ஆ. ரியாத்

இ. துபாய்

ஈ. சார்ஜா

❖ "உலக எதிர்கால எரிசக்தி உச்சிமாநாடு" அண்மையில் அபுதாபியில் தொடங்கி நடைபெற்றுவருகிறது. இந்த உச்சிமாநாடு, மத்திய கிழக்குப்பிராந்தியத்தின் எதிர்கால எரிசக்தி மற்றும் நிலைத்தன்மை குறித்த மிகப்பெரிய நிகழ்வாகும். இந்நிகழ்வு, ஆண்டுதோறும், அபுதாபியில் உள்ள தேசிய கண்காட்சி மையத்தில் நடைபெறுகிறது. "Rethinking Global Consumption, Production & Investment – உலகளாவிய நுகர்வு உற்பத்தி & முதலீடு ஆகியவற்றை மறுபரிசீலனை செய்தல்" என்பது நடப்பாண்டில் (2020) நடைபெறுகின்ற இந்த மாநாட்டுக்கான கருப்பொருளாகும்.

❖ நான்கு நாள் நடைபெறுகின்ற இந்த நிகழ்வில், உலகம் முழுவதிலுமிருந்து பல்லாயிரக்கணக்கான பங்கேற்பாளர்கள் மற்றும் கண்காட்சியாளர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனுடன் காலநிலை கண்டுபிடிப்பு பரிமாற்றம் மற்றும் எதிர்கால நிலைத்தன்மை உச்சிமாநாடு ஆகியவையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**2.மத்திய அமைச்சர் ஸ்மிருதி இரானி, சமீபத்தில் கோவாவிலிருந்து 'யஷஸ்வினி' என்ற நலத்திட்டத்தை தொடங்கிவைத்தார். இத்திட்டம் எதனை நோக்கமாகக் கொண்டுள்ளது?**

அ. சிறார்களுக்கு தடுப்பூசி போடுதல்

**ஆ. மகளிர் சுய உதவி குழுக்களுக்கு உதவுதல் ☑**

இ. கடற்கரைகளை தூய்மைப்படுத்துதல்

ஈ. பள்ளிகளுக்கு உதவுதல்



❖ மத்திய பெண்கள் & குழந்தைகள் மேம்பாடு மற்றும் ஜவுளித்துறை அமைச்சரான ஸ்மிருதி இரானி, சமீபத்தில், கோவாவிலிருந்து 'யஷஸ்வினி' என்ற திட்டத்தை தொடங்கிவைத்தார். மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ₹5 இலட்சம் வரை வட்டியில்லா கடன் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ள இத் திட்டம் ஒரு பெண்கள் மேம்பாட்டுத் திட்டமாகும்.

❖ நிபுணர்களிடமிருந்து வழிகாட்டுதல்களைப் பெறவும் இந்தத் திட்டம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு உதவும். இந்த நிகழ்ச்சியின்போது, ஸ்வஸ்திய சகி திட்டம் மற்றும் நடமாடும் மார்பகப் புற்றுநோய் பரிசோதனை திட்டம் ஆகியவற்றையும் அமைச்சர் தொடங்கிவைத்தார். கோவாவில் உள்ள அனைத்து மகளிர்க்கும் மார்பகப்புற்றுநோய் பரிசோதனையை மேற்கொள்வதற்கு, அங்கன்வாடி பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

**3.உழவர்கள் தங்கள் கரும்புப்பயிரை வெட்டுக்கிளிகளிடமிருந்து பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வு பரப்புரையைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?**

அ. குஜராத்

ஆ. இராஜஸ்தான்

**இ. உத்தரபிரதேசம் ☑**

ஈ. பீகார்



❖ உத்தரபிரதேச மாநில அரசின் கரும்பு மேம்பாட்டுத்துறையானது, உழவர்கள் தங்களின் கரும்புப் பயிர்களை வெட்டுக்கிளிகளிடமிருந்து பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வு பரப்புரையை அண்மையில் தொடங்கியது. 2019 டிசம்பர் இறுதியில், குஜராத் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் பயிரிடப்பட்டிருந்த 2500 ஹெக்டேர் பரப்பளவிலான பயிர்களை வெட்டுக்கிளிகள் சேதப்படுத்தின.

❖ வெட்டுக்கிளிகளை அழிப்பதற்கு பல்லாயிரம் லிட்டர் பூச்சிக்கொல்லிகளை இவ்விரு மாநில அரசுகளும் பயன்படுத்தின. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவியாக குஜராத் மாநில அரசு சமீபத்தில் ஹெக்டேர் ஒன்றுக்கு ₹18,500 ரூபாயை நிவாரணத்தொகையாக அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**4. 'சிறந்த திரைப்படம், சிறந்த பார்வையாளர்கள் மற்றும் சிறந்த சமூகம்' என்ற கருப்பொருளைக்கொண்ட ஒரு சர்வதேச திரைப்பட விழா, அண்மையில் எந்த நகரத்தில் தொடங்கியது?**

அ. டோக்கியோ

ஆ. துபாய்

**இ. டாக்கா ☑**

ஈ. கொழும்பு

Dhaka International Film Festival

❖ புகழ்பெற்ற டாக்கா சர்வதேச திரைப்பட விழாவின் பதினெட்டாவது பதிப்பு, சமீபத்தில், வங்கதேசத்தின் தலைநகரான டாக்காவில் தொடங்கியது. "சிறந்த திரைப்படம், சிறந்த பார்வையாளர்கள் மற்றும் சிறந்த சமூகம்" என்ற கருப்பொருளுடன் 2020 ஜனவரி 11 முதல் 19 வரை இந்த விழா நடத்தப்படுகிறது.

❖ டாக்காவின் பல்வேறு இடங்களில் நடைபெறவிருக்கும் எட்டு நாள் நீடிக்கும் இந்த விழாவின்போது, 74 நாடுகளைச்சேர்ந்த இருநூற்றுக்கும் மேற்பட்ட படங்கள் திரையிடப்படவுள்ளன. திரைப்படவிழாவின் போது "சினிமாவில் பெண்கள்" என்ற கருப்பொருளின்கீழ் மாநாடு ஒன்றும் நடத்தப்படவுள்ளது.


**5. இவ்வாண்டு (2020) நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள, 'பரிக்ஷா பே சர்ச்சா' என்ற மாணவர்களுடனான கலந்துரையாடல் திட்டத்தில் பங்கேற்கவுள்ளவர் யார்?**

அ. வெங்கையா

**ஆ. நரேந்திர மோடி ☑**

இ. ரமேஷ் போக்ரியால் நிஷாங்க்

ஈ. K சிவன்



❖ இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி, இவ்வாண்டு (2020) நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள, 'பரிக்ஷா பே சர்ச்சா' என்ற மாணவர்களுடனான கலந்துரையாடல் திட்டத்தில் பங்கேற்கவுள்ளார். இந்நிகழ்வு, ஜனவரி 20 அன்று புது தில்லியில் உள்ள டால்கடோரா மைதானத்தில் ஏற்பாடு செய்யப்படவுள்ளது. மனிதவள மற்றும் மேம்பாட்டு அமைச்சகம், அண்மையில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரிடமிருந்து இந்நிகழ்வு குறித்த பரிந்துரைகள் மற்றும் கேள்விகளைக்கேட்டது.

❖ நிகழ்வின் மூன்றாவது பதிப்பான இதில், பிரதமர் ஆயிரக்கணக்கான மாணவர்களைச் சந்தித்து தேர்வு பயத்தை எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்து உரையாற்றுவார்.

**6. அண்மையில், "மூங்கில்–ஓர் அதிசய புல்" என்பது பற்றிய பயிலரங்கம் மற்றும் கண்காட்சி நடைபெற்ற மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

அ. அஸ்ஸாம்

ஆ. மேகாலயா

**இ. ஜம்மு – காஷ்மீர் ☑**

ஈ. அருணாச்சலபிரதேசம்



❖ ஜம்மு–காஷ்மீரின் யூனியன் பிரதேசத்தில், "மூங்கில்–ஓர் அதிசய புல்" என்ற தலைப்பில் இரண்டு நாள் பயிலரங்கம் மற்றும் கண்காட்சி அண்மையில் நடத்தப்பட்டது. வடகிழக்குப் பிராந்தியத்தின் அடியொற்றி ஜம்மு–காஷ்மீரில் மூங்கில் தொழிற்துறையின் வளர்ச்சியை இப்பயிலரங்கம் மையப்படுத்தியிருந்தது.

❖ இந்நிகழ்ச்சியை வடகிழக்குப் பகுதி வளர்ச்சி அமைச்சகமும் ஜம்மு–காஷ்மீர் அரசாங்கமும் இணைந்து இதனை நடத்தியுள்ளன. இப்பயிலரங்கின்போது, வடகிழக்கு கவுன்சிலின் திட்ட ஆலோசகர், மூங்கில் தொழிற்துறையின் வளர்ச்சிக்குத் தேவையான பல்வேறு பரிந்துரைகளைப் பகிர்ந்துகொண்டார். இப் பயிலரங்கத்தை மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் திறந்துவைத்தார்.

**7.எந்த மாநிலத்தில், இந்திய குழந்தை மருத்துவ அகாடமியால், 'ஒவ்வொரு குழந்தைக்கும் காசநோயற்ற காற்று – TB free Air for Every Child' என்னும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது?**

அ. பீகார்

ஆ. மத்தியபிரதேசம்

இ. கர்நாடகா

**ஈ. கேரளா ☑**



❖ இந்திய குழந்தை மருத்துவ அகாடமியால் கேரள மாநிலத்தில், 'ஒவ்வொரு குழந்தைக்கும் காசநோய் இல்லாத காற்று' என்னும் திட்டத்தைத் தொடங்கியது. 2500 குழந்தை மருத்துவ நிபுணர்களுக்கு காசநோய் சிகிச்சை நெறிமுறை குறித்து இந்திய குழந்தை மருத்துவ அகாடமி பயிற்சியளிக்கவுள்ளது. மேலும், சிகிச்சைக்கு ஒரு சீரான மற்றும் தரப்படுத்தப்பட்ட நடைமுறையை அவர்கள் கையாள்வார்கள்.

❖ இலக்கு ஆண்டான 2025ஆம் ஆண்டுக்கு முன்னதாக, அம்மாநிலத்தின் அனைத்துக் குழந்தைகளும் காசநோயிலிருந்து விடுபடுவதை இந்தத்திட்டம் உறுதிசெய்யும். அவர்கள் பள்ளிகளிலும் பரப்புரைகளை

நடத்துவுள்ளதோடு, ஊட்டச்சத்துக்குறைபாடு, பெரியவர்கள் புகையிலை பயன்படுத்துவதால் ஏற்படும் மோசமான விளைவுகள் பற்றியும் விளக்குவார்கள்.


**8.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, "Shopper" என்றால் என்ன?**

அ. மின்னணு-வணிக வலைத்தளம்

**ஆ. தீம்பொருள் ☑**

இ. எந்திர மனிதன்

ஈ. பொருட்கள் வாங்குவதற்கான மின்-வாகனம்



- முன்னனி கணினி தீநிரல் எதிர்ப்பு நிறுவனமான காஸ்பர்ஸ்கை, ஷாப்பர் என்னும் 'Trojan' வகை கணினி தீம்பொருளால் (Malware) 14 சதவீதத்துக்கும் அதிகமான இந்தியர்களின் திறன்பேசிகள் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளது.
- திறன்பேசி உரிமையாளரின் அனுமதியின்றி அவருக்குத் தெரியாமலே இத்தீம்பொருள் நிறுவப்படும் இந்தத் தீம்பொருள், திறன்பேசி உரிமையாளரின் பெயரால் பல செயலிகளுக்கு கருத்துரை எழுதுவது, விளம்பரங்களைக் காட்டுவது பிற செயலிகளை நிறுவுவது என பல்வேறு பணிகளை மறைமுகமாக செய்கிறது. இந்தத் தீம்பொருளால் பாதிக்கப்பட்டுள்ள பயனர்களில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் இரஷ்யாவைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.

**9.ஜனவரி மாதம் வடவிந்தியாவில் கொண்டாடப்படும் மகர சங்கராந்தியுடன் கீழ்க்காணும் இந்தியாவின் எந்தப் பண்டிகை ஒத்துப்போகவில்லை?**

அ. தைப்பொங்கல்

**ஆ. விஷு ☑**

இ. மகர சங்கராந்தி

ஈ. மாக் பிஹு



- 'லோரி' என்பது வட இந்தியாவில் கொண்டாடப்படும் ஒரு திருவிழாவாகும். குறிப்பாக பஞ்சாபில் 'மகர சங்கராந்தி'க்கு முன்னதாக இத்திருவிழா கொண்டாடப்படுகிறது. குளிர்காலம் நிறைவடைவதையும், அந்தப் பகுதியில் கோடைகாலம் தொடங்குவதையும் குறிக்கும் வகையில் இது உள்ளது. பாரம்பரிய நாட்காட்டியின்படி, இந்த ஆண்டு (2020) 'லோரி' திருவிழா ஜன.13 அன்று வருகிறது. இது முக்கியமாக பஞ்சாப், ஹரியானா மற்றும் தில்லியில் கொண்டாடப்படுகிறது.
- இந்தத் திருவிழா மகாராஷ்டிரா, கோவா, ஆந்திரபிரதேசம், மேற்கு வங்கம் (பௌஷ் சங்கராந்தி என்றும் அழைக்கப்படுகிறது), கர்நாடகா மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் 'மகர சங்கராந்தி' என்று கொண்டாடப்படுகிறது. மத்திய இந்தியாவில் 'சுகரத்' என்றும், அஸ்ஸாம் மாநிலத்தில் 'மாக் பிஹு' என்றும் புவியெங்கும் பரவி பார்போற்ற வாழும் தமிழர்களால் 'தைப்பொங்கல்' திருவிழாகவும் இது கொண்டாடப்படுகிறது. வைசாகியுடன் இணைந்து விஷு கொண்டாடப்படுகிறது.

**10. SEBIஇன் அறிவுறுத்தல்களின்படி, எந்தக் காலக்கெடுவுக்குள் 500 முன்னணி நிறுவனங்களின் தலைவர் (Chairman) மற்றும் மேலாண்மை இயக்குநர் (Managing Director (MD)) பதவிகளைப் பிரித்து, இருவேறு நபர்களால் அது நிர்வகிக்கப்பட வேண்டும்?**

அ. 2020 ஏப்ரல் 1

ஆ. 2021 ஏப்ரல் 1

இ. 2022 ஏப்ரல் 1 ☑

ஈ. 2023 ஏப்ரல் 1



- பங்குச்சந்தை ஒழுங்காற்றுநரான SEBIஇன் அண்மைய அறிவிப்பின்படி, சந்தை மூலதனமயமாக்கலின் மூலம் பட்டியலிடப்பட்ட 500 முன்னணி நிறுவனங்களின் தலைவர் & மேலாண்மை இயக்குநரின் பதவிகளைப் பிரித்து, இருவேறு நபர்களை நியமிக்கப்பதற்கான காலக்கெடு 2022 ஏப்ரல் வரை (அதாவது இன்னும் ஈராண்டுகளுக்கு) ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
- முன்னதாக, 2020 ஏப்ரலுக்குள் இதனைச் செய்து முடிக்க அந்நிறுவனங்கள் கட்டாயப்படுத்தப்பட்டன. தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் பதவிகளைப் பிரிக்கும் திட்டம், முதன்முதலில், உதய் கோட்டக் தலைமையிலான கார்ப்பரேட் கவர்னன்ஸில் மேற்கொள்ளப்பட்டது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- தென்னிந்திய நூல் விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கத்தின் சார்பில் நடைபெறும் 43ஆவது சென்னை புத்தகக்கண்காட்சியை முதலமைச்சர் கே. பழனிச்சாமி தொடக்கிவைத்தார்.
    - புத்தகக் கண்காட்சியின் தொடக்கவிழாவின்போது வழங்கப்பட்ட விருதுகள்:–
        - சிறந்த பதிப்பாளருக்கான பதிப்புச் செம்மல் க.கணபதி விருது – அரு.லெட்சுமணன்.
        - சிறந்த நூல் விற்பனையாளருக்கான பதிப்பகச்செம்மல் ச.மெய்யப்பன் விருது – R.அருணாச்சலம்.
        - சிறந்த தமிழறிஞருக்கான பாரி செல்லப்பனார் விருது – பொற்கோ.
        - சிறந்த சிறுவர் அறிவியல் நூலுக்கான நெல்லை சு.முத்து விருது – N S சிதம்பரம்.
        - தென்னிந்திய நூல் விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கத்தின் சிறந்த பதிப்பாளருக்கான விருது – இராம லெட்சுமணன்.
        - சிறந்த குழந்தை எழுத்தாளருக்கான குழந்தை கவிஞர் அழ. வள்ளியப்பா விருது – செ.சுகுமாரன்.
        - சிறந்த பெண் எழுத்தாளருக்கான முதல் பெண் பதிப்பாளர் அம்சவேணி பெரியண்ணன் விருது – இரமணிசந்திரன்.

---